பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

18 12 2024 **WEDNESDAY** **6.30 PM**

தலைப்புச் செய்திகள்

1. அரசியல் சாசன சிற்பி அம்பேத்கருக்கு அவமரியாதை செய்தது காங்கிரஸ்தான் என பிரதமர் திரு நரேந்திர மோடி குறை கூறியுள்ளார்.

2. பாரத ரத்னா அம்பேத்கர் குறித்து தாம் பேசியது தொடர்பாக காங்கிரஸ் தவறான தகவல்களை தெரிவித்து வருவது கண்டிக்கத்தக்கது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. சாகித்ய அகாடமி விருது தமிழில் "திருநெல்வேலி எழுச்சியும் - வ உ சி-யும்" என்ற ஆய்வு நூலுக்காக திரு ஏ ஆர் வேங்கடாசலபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

4. திருவள்ளுர், சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்புள்ளதாக வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

5. உலக இளையோர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Pranav Venkatesh** இரண்டு தங்கப்பதக்கங்களை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ----

**<<<<<<>>>>>>**

அரசியல் சாசன சிற்பி அம்பேத்கருக்கு அவமரியாதை செய்தது காங்கிரஸ்தான் என பிரதமர் திரு நரேந்திர மோடி குறை கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பில் இருந்தபோது அம்பேத்கர் எவ்வாறு அவமதிக்கப்பட்டார் என்பது குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா எடுத்துரைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த காங்கிரஸ், தற்போது திரு அமித் ஷா கூறிய கருத்தை திரித்து பேசி வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

அம்பேத்கர் மற்றும் ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக காங்கிரஸின் செயல்பாடுகளை மக்கள் அறிந்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

டாக்டர் அம்பேத்கர் தேர்தலில் இரண்டு முறை தோல்வியடைந்ததற்கு காங்கிரஸ்தான் காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா விருதினை அம்பேத்கருக்கு வழங்க காங்கிரஸ் மறுத்ததாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற மைய மண்டபத்தில் அம்பேத்கர் புகைப்படத்தை வைப்பதற்குகூட காங்கிரஸ் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், அம்பேத்கரின் கொள்கைகளை நிறைவேற்றி வருவதாக அவர் கூறியுள்ளார்.

ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கான சட்டத்தை மேலும் வலிமைப்படுத்தியது, அம்பேத்கர் கண்ட கனவை நனவாக்கும் வகையில் 25 கோடிக்கும் மேற்பட்ட மக்களை வறுமையின் பிடியில் இருந்து மீட்டது போன்ற நடவடிக்கைகளை தமது அரசுதான் மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் வீட்டுவசதித்திட்டம், குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் உள்ளிட்டவை ஏழை மக்களின் நலனை கருத்தில்கொண்டே செயல்படுத்தப்பட்டதாகவும், இதன்மூலம் அம்பேத்கரின் எண்ணங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

முன்னதாக, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் மத்திய அமைச்சர் திரு அமித் ஷா, அம்பேத்கரை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை தெரிவித்தாக கூறி அமளியில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக, இரு அவைகளும் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

இதற்கிடையே இன்று மாலை புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய திரு அமித் ஷா, அம்பேத்கர் தொடர்பாக தாம் பேசியது குறித்து காங்கிரஸ் திட்டமிட்டு தவறான தகவல்களை தெரிவித்து வருவது கண்டிக்கத்தக்கது என்றார்.

பாரத ரத்னா அம்பேத்கருக்கும், அரசியலமைப்பு சட்டத்திற்கும் எதிராக செயல்பட்டது காங்கிரஸ் கட்சிதான் என்றும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<<>>>>>>

நடப்பாண்டிற்கான சாகித்ய அகாடமி விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழில் “திருநெல்வேலி எழுச்சியும் - வ உ சி-யும்” என்ற ஆய்வு நூலுக்காக திரு ஏ ஆர் வேங்கடாசலபதிக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

வ உ சி பற்றி எழுதிய இந்த நூலுக்காக விருது வழங்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று திரு வேங்கடாசலபதி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

சாகித்ய அகாடமி விருது பெற்றுள்ள திரு வேங்கடாசலபதிக்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக வலுவடைந்துள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

கடல்பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுவதாக திரு செந்தாமரை கண்ணன் கூறினார்.

<<<<<<>>>>>>

தூத்துக்குடி மாவட்டத்தில் மழை காரணமாக ஏற்பட்ட பயிர்ச்சேதம் குறித்த கணக்கெடுப்பு தொடங்கியுள்ளதாக மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் கூறியுள்ளார்.

இன்று தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் மத்திய அரசு சார்பில் பாலியல் வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. நாமக்கல் மாவட்டம் காளிப்பட்டியில் இன்று நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி தங்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக இருந்தது என்று இதில் பங்கேற்ற மாணவி ஒருவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

நெல்லை மாவட்டம் கொடுமுடியாறு அணையிலிருந்து பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. சட்டப்பேரவைத் தலைவர் திரு அப்பாவு தண்ணீரை திறந்துவைத்தார், இதன் மூலம் நாங்குநேரி மற்றும் வள்ளியூர் வட்டாரத்தில் உள்ள 5 ஆயிரத்து 781 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

-----------------

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் "உங்களை தேடி - உங்கள் ஊர்" திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுப்பணிகள் குறித்து மாநில அமைச்சர் திரு தா மோ அன்பரசன் ஆலோசனை மேற்கொண்டார்.

-----------------

சேலம் ரயில்வே கோட்ட முதுநிலை வணிக மேலாளர் திரு பூபதிராஜா, ரயில்வே சேவா புரஸ்கார் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

-------------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் "போலீஸ் அக்கா திட்டம்" இன்று முதல் தொடங்கப்பட்டுள்ளது.

---------------

கோவையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும் ஊடகவியலாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சி இன்று தொடங்கியது.

-------------

பெரம்பலூர் மாவட்டத்தில் சூரிய ஒளி மின்சாரத்தை முழுமையாக பயன்படுத்தும் வகையில் மின்மோட்டார்களை பகல் நேரத்தில் விவசாயிகள் பயன்படுத்த வேண்டும் என்று மின்வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக இளையோர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Pranav Venkatesh** இரண்டு தங்கப்பதக்கங்களை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

ஸ்லோவேனியாவில் நடைபெற்ற இப்போட்டியின் 18 வயதுக்கு உட்பட்டோருக்கான **Rapid** மற்றும் **Blitz** பிரிவுகளில் அவர் இப்பதக்கங்களை கைப்பற்றினார்.

<<<<<<END>>>>>>